IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT

| | | | | |
|---|---|---|---|---|
| | | O.S. No. | : | 48/2015 |
| | | D/W's | : | 1 |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | Muruganantham | CASTE | : | |
| S/O. / W/O. | | RELIGION | : | |
| VILLAGE | | CALLING | : | |
| TALUK | | AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of **17-10-2022**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி (வாதி தரப்பில்) : 17-10-2022**

நீங்கள் தாவா வழக்கிற்கு முன்பு வேறு வழக்கில் ஏதேனும் சாட்சியமாகவோ, தரப்பினராகவோ இருந்ததில்லை என்றால் சரிதான். உங்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரமான வாக்குமூலத்தில் கண்டுள்ள சொத்துக்கள் குறித்த அளவீடுகள் என்பது பி.வா.சா.ஆ.3ன் அடிப்படையில் தான் சொல்லியுள்ளீர்கள் என்றால் ஆம். பிரமான வாக்குமூலத்தில் கண்டுள்ள சங்கதிகள் மற்றும் வழக்கிற்கு கண்டுள்ள சங்கதிகள் அனைத்தும் உங்களுடைய வழக்கறிஞர் சொல்லி தான் தெரியும் என்றால் நானும், எனது மனைவியும் சொன்னதின் அடிப்படையில் பிரமான வாக்குமூலம் தயார் செய்யப்பட்டது. உங்களுடைய மனைவி நல்ல மனநிலையில் நல்ல உடல் ஆரோக்கியத்துடன் தான் இருக்கிறார்கள் என்றால் சரிதான். உங்கள் மனைவிக்காக நீங்கள் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் ஆம்.

பி.வா.சா,ஆ.2ன் அசல் ஆவணம் குறித்து தாக்கல் செய்யப்படாததற்கு உங்கள் தரப்பில் நீதிமன்றத்தில் அனுமதியோ அல்லது பி.வா.சா.ஆ.2ன் அசல் ஆவணம் தாக்கல் செய்யப்படாததற்கான விளக்கத்தையோ குறிப்பிடப்பட்டு அனுமதி பெறப்படவில்லை என்று சொன்னால் சரிதான். பி.வா.சா.ஆ.2ல் நீங்கள் தரப்பினர் இல்லை என்று சொன்னால் என்னுடைய மனைவி தரப்பினர் ஆவார். பி.வா.சா,ஆ2ல் முருகானந்தம் ஆகிய நீங்கள் கிரையம் வாங்கியுள்ளீர்களா என்றால் இல்லை. என்னுடைய மனைவி பெயரில் கிரையம் வாங்கப்பட்டுள்ளது. பி.வா.சா.ஆ.2ல் நீங்கள் சாட்சி கையொப்பம் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். பி.வா.சா,ஆ.2ன்கீழ் சாட்சியம் அளிக்க தகுதியுடையவர் உங்கள் மனைவி என்பதினால், சாட்சியம் தொடர்பாக பி.வா.சா,ஆ.2ன் கீழ் நீங்கள் சாட்சியம் அளிக்க தகுதியில்லை என்பதினால் உங்களுடைய சாட்சியம் நிராகரிக்கக்கூடியது என்று சொன்னால் அவ்வாறு சொல்வது தவறு. பி.வா.சா.ஆ.2 ஆவணத்தின் நீங்கள் தரப்பினர்

இல்லாததால் ஆவணமாக குறியீடு செய்யப்பட்டது தவறானது என்பதினால் மேற்படி ஆவணம் நிராகரிக்கப்படக்கூடியது என்று சொன்னால் அவ்வாறு சொல்வது தவறு.

பி.வா.சா.ஆ.1ல் நீங்கள் தரப்பினர் இல்லை என்று சொன்னால் சரிதான். பி.வா.சா.ஆ,1ல் நீங்கள் தரப்பினர் இல்லை என்பதினாலும், பி.வா.சா,ஆ.1ல் கண்டுள்ள சங்கதிகளை கொண்டு நீங்கள் சாட்சியம் அளித்திட தகுதியில்லை என்பதினால் மேற்படி பி.வா.சா,ஆ.1 குறியீடு செய்யப்பட்டது தவறானது என்ற அடிப்படையில் பி.வா.சா,ஆ.1 நிராகரிக்கப்படவேண்டும் என்று சொன்னால் அவ்வாறு சொல்வது சரியல்ல. பி.வா.சா.ஆ.1ல் கண்டுள்ள சங்கதிகளை பொறுத்தவரை அதில் உள்ள தரப்பினர்களை விசாரணை செய்தால் தான் உண்மை தெரியவரும் என்று சொன்னால் அது தவறு. பி.வா.சாஆ.1ல் நீங்கள் தரப்பினர் இல்லை என்பதினால் அதை பொறுத்து நீங்கள் சாட்சியம் அளித்திட உங்களுக்கு தகுதியில்லை அதனால் உங்களுடைய சாட்சியம் நிராகரிக்கக்கூடியது என்று சொன்னால் அது தவறு. பி.வா.சா.ஆ.1ல் கண்டுள்ள தரப்பினர்களை உங்கள் தரப்பில் சாட்சிகளாக விசாரிக்க போவதில்லை என்று சொன்னால் அவ்வாறு சொல்வது தவறு. பி.வா.சா.ஆ.1 ஏற்பட்டது குறித்து உங்களுக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்று சொன்னால் தெரியாது.

தாவா சொத்தின் வடக்கு பக்கம் பார்த்து வாசல் அமைக்கப்பட்டுள்ளது என்றும், பாண்டியராஜன் நாடார் என்பவரின் வீடு இரண்டு பகுதிகளாக செண்ட்ரிங் கட்டிடம், மண் சுவர் கட்டிடம் இருபகுதிகளாக அமைந்துள்ளது என்றால் சரிதான். ஆனால் பாண்டியராஜன் வாசல் பகுதி கிழபுறம் பார்த்து அமைந்துள்ளது. செண்டிரிங் கட்டிட வாசல் படி கிழக்கு புறமும், மண்சுவர் வீடு வடக்கு புறமும் அமைந்துள்ளது என்றால் சரிதான். உங்களது வீட்டிற்கு தெற்கு புறம் உள்ள கருப்புசேர்வை என்பவரின் வீடு மேற்கு பார்த்த வாசல் அமைந்துள்ளது என்று சொன்னால் மேற்கு புறமும் மற்றும் தென்புறமும் பார்த்து வாசல் அமைந்துள்ளது. அதேபோல தாவா சொத்திற்கு தென்புறம் அமைந்துள்ள சுப்புசேர்வை என்பவரின் வீடு கிழக்கு பார்த்த வாசல் அமைந்துள்ளது என்று சொன்னால் கிழபுறம் மற்றும் தென்புறம் பார்த்து வாசல் படி அமைந்துள்ளது.

நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை மற்றும் வரைபடத்தில் கண்டுள்ள விபரங்களை தெரிந்துகொண்டு தான் உங்களால் முதல் விசாரணை பிரமான வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் தவறு. நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் குறித்த விபரங்கள் தெரிந்துகொள்ளாமல் உங்களால் பிரமான வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் தெரிந்துகொண்டு தான் தாக்கல் செய்தேன். நீ.ம.சா.ஆ.1, 2 ஆவணங்களை

சாட்சியிடம் காட்டி அதில் உள்ள விபரங்கள் தெரிந்துகொண்டு தான் பிரமான வாக்கு மூலம் தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை மற்றும் வரைபடத்தில் உள்ள நில அளவையர் வரைபடம் மற்றும் உங்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பி.வா.சா,ஆ.3க்கும் வேறுபாடுகள் உள்ளது என்று சொன்னால் சரிதான். பி.வா.சா,ஆ.3ல் வாதி சொத்திற்கு அடுத்துள்ள தென்மேற்கு பகுதியில் சந்து உள்ளது போல் வரைபடம் உங்கள் தரப்பில் தயார் செய்யப்பட்டு, தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அது தவறு. வருவாய் துறை ஆவணமான புலப்பட வரைபட ஆவணம் ஆகும். பி.வா.சா,ஆ3ல் நில அளவையர் அவர்களால் நீதிமன்றத்திற்கு செல்லத்தக்கதல்ல என்று குறிப்பிடப்பட்டு ஆவணம் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

உங்களது பூர்வீகம் எந்த ஊர் என்றால் தேவக்கோட்டை ஆகும். பி.வா.சா.ஆ.2க்கு முன்பு வாதியின் தாவா சொத்தான சர்வே எண்.558 குறித்து நேரடியாக உங்களுக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். வாதிக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்து சம்பந்தப்பட்ட மூல ஆவணங்கள் மற்றும் பி.வா.சா.ஆ.2 ஆவணத்திற்கு முன்பு உள்ள ஆவணங்கள் குறித்து உங்களுக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். உங்களுடைய மனைவிக்கு கிரையம் செய்து கொடுத்து முன்கிரையதாரருக்கு பாக சொத்து கிடைத்தது குறிதது உங்களுக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 மற்றும் 2 ஆவணங்களில் வாதியின் தாவா சொத்தின் மேற்கு புறத்தில் உள்ள இடத்தினை பொறுத்து பொதுச்சந்து என்று குறிப்பிட்டு இருப்பது எந்தவித பொது ஆவணங்களும் இல்லாமலும், மோசடியாக உங்களுடைய முன் கிரையதாரராலும், உங்களது மனைவியாலும் தயார் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் அவ்வாறு சொல்வது தவறு. உங்கள் தரப்பில் வாதியின் தாவா சொத்திற்கு மேற்கு புறத்தில் உள்ள இடத்தை பொறுத்து பொது சந்து என்று சொல்லப்படுவதற்கு தீர்ப்பு உங்களுடைய முன் கிரையதாரராலும், உங்கள் மனைவி தரப்பிலும் எதுவும் பெறப்படவில்லை என்று சொன்னால் சரிதான்.

பி.வா.சா,ஆ,3ல் சர்வே எண்.12 என்பது யாருக்கு பாத்தியப்பட்டுள்ளது என்பது குறித்து நீங்கள் தெரிந்துகொண்டீர்களா என்றால் இல்லை. சர்வே எண்.12 என்பது சர்வே எண்.11 உடன் சேர்ந்தே சுப்புசேர்வையின் மகன்கள் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்பதை தெரிந்துகொண்டும், இந்த வழக்கிற்காக பொது சந்து உள்ளது என்பதற்காக சுப்புசேர்வை மகன்கள் பெயரில் உள்ள பட்டாவை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் அவ்வாறு சொல்வது தவறு.

பி.வா.சா.ஆ.4 உங்களால் புகைப்படம் எடுக்கப்படவில்லை என்று சொன்னால் போட்டோகிராபர் அழைத்து வந்து புகைப்படம் எடுக்கப்பட்டது. பி.வா.சா,ஆ.4ல் உள்ளதை நிரூபணம் செய்திட போட்டோகிராபரை அழைத்து தான் நிரூபணம் செய்ய இயலும் என்று சொன்னால் அவ்வாறு சொல்வது தவறு. தாவா வழக்கு நிலுவையில் உள்ளது என்பது குறித்து தெரிவிக்கப்பட்டு தான் பி.வா.சா.ஆ.4 எடுக்கப்பட்டது என்று சொன்னால் அது தவறு. வழக்கிற்கு முன்பு உள்ள புகைப்படம் குறித்தும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு உங்களால் வழக்கிற்கு முன்பு புகைப்படம் எடுக்கப்பட்டுள்ளது என்பது குறித்து பி.வா.சா.ஆ.4ல் தெரிவிக்கப்படவில்லை என்று சொன்னால் அது தவறு. அவ்வாறு மேற்படி புகைப்படம் வழக்கிற்கு முன்பு எடுக்கப்பட்டது என்பதற்கான ரசீதுகள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

மற்றொரு நபரின் பெயரில் உள்ள பட்டாவை ரத்து செய்திட 3ம் நபர் ஒருவருக்கு உரிமையில்லை என்ற விபரம் உங்களுக்கு தெரியும் என்று சொன்னால் சரிதான். பி.வா.சா.ஆ,1ல் சொத்து விபரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 2025 சதுரடி அளவீடை காட்டக்கூடிய பட்டா ஆவணத்தை உங்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்யவில்லை. பி.வா.சா.ஆ.2 ஏற்படுவதற்கு முன்பு பி.வா.சா.ஆ,2ல் கண்டுள்ள சொத்திற்குண்டான பட்டா ஆவணம் உங்கள் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். தாவா சொத்திற்கு மேற்கு புறம் உள்ள இடமானது பொது சந்து என்று 60 ஆண்டுகள் உள்ளதாக உங்களால் சொல்லப்படுவதற்கு குறிப்பிட்டு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். தாவா சொத்திற்கு மேற்கு புறத்தில் பொது சந்து என்று 60 ஆண்டுகளாக எதுவும் இல்லை, அதனை வாதியே அவரது சொந்த இடமாக அவருடைய வசதிக்கேற்ப பயன்படுத்தி வந்ததை தவறாக புரிந்துகொண்டு உங்களது மனைவியும், உங்களது மனைவியின் முன் கிரையதாரர்களும் தவறாக வாதியின் தாவா சொத்து பொது சந்து என்று உரிமை கோருகிறீர்கள் என்று சொன்னால் அவ்வாறு சொல்வது தவறு. வாதியின் மேற்கு புற சொத்தை பொறுத்து எந்தவித பொது ஆவணங்களும் இல்லாமல் தவறுதலாக பி.வா.சாஆ,1 மற்றும் 2 ஆவணங்களின் அடிப்படையில் பொது சந்து என்று குறிப்பிடுவது வாதிக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்தை அபகரிப்பதற்காக என்று சொன்னால் அவ்வாறு சொல்வது தவறு.

நீதிமன்ற ஆணையர் அறிக்கை குறித்து உங்களது பிரமான வாக்குமூலத்தில் உங்களது வசதிக்கேற்ப தவறான சங்கதிகளை குறிப்பிட்டு பிரமான வாக்குமூலமாக

தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அது தவறு. நீதிமன்ற ஆணையர் அறிக்கை தவறானது என்று சொன்னால் நீதிமன்ற ஆணையரை சாட்சியாக விசாரணை செய்திருக்க வேண்டும் அவ்வாறு செய்திடாமல் நீ.ம.சா.ஆ.1, 2-ஐ மறுத்து சாட்சியம் அளிக்கப்படுவது ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்று சொன்னால் அவ்வாறு சொல்வது தவறு. உங்களது நிரூபண வாக்குமூலத்தில் தாவா சொத்தை பொறுத்து அடி அளவுகள் அனைத்தும் உங்களது வசதிக்கேற்ப கூட்டியும் குறைத்தும் தவறுலாக குறிப்பிடப்பட்டுள்ளதால் தாவா சொத்தை பொறுத்து நிரூபண வாக்கு மூலத்தில் சொல்லியுள்ள அளவீடுகள் தவறானது என்றால் அது சரியல்ல. அதேபோல வாதி வழக்குரையில் கூறியுள்ள படி வழக்குரையுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள மாதிரி வரைபடத்தில் கண்டுள்ள தென்வடலாக 20 அடி நீளம், கிழமேலாக 1 1/2 அடி அகலமும், 36 அடி உயரம் கொண்ட வாதியின் தாவா சொத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ள நீங்கள் வாதி வசம் ஒப்படைக்க கடமைப்பட்டுள்ளீர்கள் என்றால் அவ்வாறு சொல்வது தவறு. ஆகவே, தாவாவில் வாதி கோரி பரிகாரம் கிடைக்கக் கூடியது என்று சொன்னால் அது தவறு.

(ஒம்.) திரு. T. கோகுலகிருஷ்ணன், பி.ஏ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி